


09. 04. 2026

தலைப்புச் செய்திகள்

- தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படும்.
- இதுவரை 142 வேட்பு மனுக்கள் விலக்கி கொள்ளப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் அம்மா உணவகங்கள் முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்..
- பொருளாதாரத்தில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று திமுக இளைஞர் அணி செயலாளர் திரு. உதய நிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.
- மத்திய ரிசர்வ் காவல் படையினரின் வீர தீரத்தை பறை சாற்றும் வெற்றி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு ஆயுஷ் ஷெட்டி முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

*************

தமிழ்நாடு - வேட்பு மனு

தமிழ்நாட்டில் வரும் 23ம் தேதி நடைபெறும் வாக்குப்பதிவிற்கான வேட்புமனுக்களை விலக்கி கொள்வதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடையும் நிலையில் இதுவரை 142 மனுக்கள் விலக்கிகொள்ளப்பட்டுள்ளன.

இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படுகிறது.

*************

பிரச்சாரம்

இதனிடையே மாநிலத்தில் அரசியல் தலைவர்களின் பிரச்சாரம் விறு விறுப்படைந்துள்ளது.

சென்னை சேப்பாக்கத்தில் இன்று வாக்குகளை சேகரித்த அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தமிழ்நாட்டில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால் அம்மா உணவகங்கள் முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படும் என்றார்.

நாமக்கல்லில் திமுக வேட்பாளருக்கு ஆதரவு திரட்டிய அக்கட்சியின் துணை பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகாலத்தில் மக்களின் முன்னேற்றத்தை லட்சியமாக கொண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

திருவள்ளுர் மாவட்டம் பொன்னேரியில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்குகளை திரட்டிய திமுக இளைஞர் அணி செயலாளர் திரு.உதய நிதி ஸ்டாலின்

பொருளாதாரத்தில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றார்.

நெல்லை பழைய பேட்டையில் அஇஅதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் வாக்குகளை இன்று சேகரித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் மத்திய அரசின் மூலமே கொண்டுவரப்பட்டதாக குறிப்பிட்டார்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு.சண்முகம் பழனியில் இன்று வாக்குகளை சேகரிக்கையில் திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பொருளாதார வளர்ச்சி மேம்படுவதோடு வேலை வாய்ப்பும் பெருகும் என்றார்.

கன்னியாகுமரி கிள்ளியூர் தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு.சீமான் கடந்த 50 ஆண்டுகளாக கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சி எதுவும் நடைபெறவில்லை என்றும், இம்மாவட்டத்தின் வளங்கள் சுரண்டப்பட்டதாகவும் குறை கூறினார்.

*************

விழிப்புணர்வு

தமிழ்நாட்டில் தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் களைகட்டியுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம் உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடம் 100 சதவிகித வாக்குப்பதிவை ஏற்படுத்தும்

விழிப்புணர்வு நிகழ்வில் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.விஷூ மகாஜன் பங்கேற்று அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வாய்ஸ்

மயிலாடுதுறையில் மலர், காய்கறிகளால் உருவாக்கப்பட்ட செல்ஃபி பாய்ன்ட் ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கள்ளக்குறிச்சியில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி கல்லூரி மாணாக்கரிடம் அங்கன்வாடி பணியாளர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

*************

தேர்தல்

புதுச்சேரி, அஸ்ஸாம், கேரளம் மாநிலங்களின் சட்டப்பேரவைகளுக்கு தேர்தல் வாக்குப்பதிவு தற்போது சுமூகமாக நடைபெற்று வருகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி

அஸ்ஸாமில் 59.63 சதவிகிதமும்,

கேரளத்தில் 49.7 சதவிகிதமும்,

புதுச்சேரியில் 56.83 சதவிகிதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வாக்காளர்கள் உற்சாகமாக வாக்களித்து வருகின்றனர்.

துணை நிலை ஆளுநர் கே.கைலாஷநாதன், முதலமைச்சர் திரு. என்.ரங்கசாமி, எதிர்கட்சி தலைவர் திரு.ஆர்.சிவா உள்ளிட்டோர் இன்றுகாலையிலேயே தங்களது வாக்குகளை செலுத்தினர்.

*************

இடைத்தேர்தல்

இத்தேர்தலுடன் கர்நாடகாவில் 2 சட்டப்பேரவை தொகுதிகள்,

நாகலாந்து திரிபுராவில் தலா 1 சட்டப்பேரவை தொகுதிக்கும் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

*************

மேற்குவங்கம்

மேற்குவங்கத்திலும் முதற்கட்டமாக 152 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 23ஆம் தேதி நடைபெறும் வாக்குப்பதிவிற்கான வேட்புமனுக்களை திரும்பபெற இன்று கடைசி நாளாகும்.

இம்மாநிலத்தில் 142 தொகுதிகளில் வரும் 29ஆம் தேதி நடைபெறும் 2ஆவது இறுதி கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்பு மனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

இந்த 5 மாநில தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

*************

பிரதமர்

நாட்டின் ஜனநாயகத்தை எழுச்சிமிக்கதாக மேம்படுத்தும் வகையில் சட்டப்பேரவைகளில் மகளிருக்கான இட ஒதுக்கீடு தற்போது தேவை என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விவாதிப்பதற்காக வரும் 16ஆம்தேதி நாடாளுமன்றத்தில் சிறப்பு கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

கடந்த 2023-ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இதுதொடர்பான மசோதா நிறைவேற்றப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

*************

சௌரிய திவஸ்

மத்திய ரிசர்வ் காவல்படையினரின் அளப்பரிய வீர தீரத்தை பறைசாற்றும் வீர வெற்றி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1965-ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றத்தின் போது குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தின் எல்லை பகுதியான சர்தாரில் 3 ஆயிரத்து 500 வீரர்களை கொண்ட பாகிஸ்தான் காலாட் படையின் திடீர் தாக்குதலை அங்கு பணியில் ஈடுபட்டிருந்த சிறிய குழுவினராக மத்திய ரிசர்வ் காவல் படையினர் துணிச்சலுடனும், வீர தீரத்துடனும் எதிர்த்து போராடி எதிரிகளை பின்வாங்க செய்தனர்.

இந்த சம்பவத்தில் 34 பாகிஸ்தானிய வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 4 பேர் உயிருடன் சிறைபிடிக்கப்பட்டனர்.

இந்திய தரப்பில் 7 மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள் உயிர் தியாகம் புரிந்தனர்.

சிறிய குழுவாக இருந்த போதிலும், மத்திய ரிசர்வ் காவல் படையினர் துணிச்சலுடன் 15 மணி நேரம் போராடி வெற்றியை நிலைநாட்டியது குறிப்பிடத்தக்கது.

உயிர் தியாகம் புரிந்த மத்திய ரிசர்வ் காவல்படையினருக்கு இன்று அஞ்சலி செலுத்திய மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தகர்க்க முடியாத அரணாக நின்று மத்திய ரிசர்வ் காவல் படையினர் எதிரிகளை முறியடித்து இந்திய வரலாற்றில் சிறப்பான அத்யாயத்தை படைத்ததாக பாராட்டினார்.

*************

விக்ரம் மிஸ்ரி

மத்திய வெளியுறவுத்துறை செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி அமெரிக்க பாதுகாப்பு செயலர் திரு. மைக்கேல் டஃபியை இன்று வாஷிங்டனில் சந்தித்து ராணுவ ஒத்துழைப்பு மேம்பாடு குறித்து விவாதித்தார்.

உற்பத்தி, நீடித்த நிலைத்தன்மை, இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் உயர்முன்னுரிமைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

திரு.மிஸ்ரி அமெரிக்காவின் தொழில் வர்த்தக துறை செயலர்களையும் சந்தித்து பேசியதாக கூறிய திரு.ஜெய்ஸ்வால் இருதரப்பு உறவுகள் மற்றும் முதலீடுகளை வலுப்படுத்துவது குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த கட்டுப்பாட்டு நெறிமுறைகள் குறித்த கருத்துக்களும் இதில் பரிமாறப்பட்டதாக திரு.ஜெய்ஸ்வால் தெரிவித்தார்..

*************

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் மொரிசியஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இன்று செல்கிறார்.

முதற்கட்டமாக மொரிசியஸில் 9ஆவது இந்திய பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்கும் அவர் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

இரண்டாம் கட்டமாக நாளை மறுநாள் தொடங்கி ஐக்கிய அரபு அமீரகத்தில் பல்வேறு தலைவர்களை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசனைகளை நடத்துகிறார்.

*************

சமரச தினம்

நீதிமன்றங்கள் மூலம் வழக்குகளை விரைந்து முடிக்கும் சமரச தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி விழுப்புரம் நீதிமன்றத்தில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை முதன்மை நீதிபதி மணிமொழி துவக்கிவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருப்பத்தூர் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக முடித்துக்கொள்ள சமரச மையத்தை நாடும் வகையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

*************

மீனவர்கள்

தனுஷ்கோடி தலைமன்னார் இடையே நள்ளிரவு மீன்பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த 10 மீனவர்களை எல்லை தாண்டியதாக கூறி இலங்கை கடற்படை சிறை பிடித்துள்ளது.

அவர்களது ஒரு படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

காங்கேசன் துறை கடற்படை முகாமில் இம்மீனவர்களிடம் விசாரணை நடைபெற்றுவருகிறது.

*************

பேட்மிண்டன்

சீனாவில் நடைபெறும் ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் தைவானின் Chi Yu-Jen-ஐ 21-16 21-12 என்ற நேர் செட்களில் வென்றார்.

*************

குத்துசண்டை

மங்கோலியாவில் நடைபெறும் ஆசிய குத்துசண்டை சேம்பியன்பட்ட போட்டியில் இந்தியா நான்கு தங்கம், ஒரு வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளது.

இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில்

70 கிலோ எடைபிரிவு, 60 கிலோ, 54 கிலோ 48 கிலோ எடைபிரிவுகளில் தங்க பதக்கங்கள் கைப்பற்றப்பட்டன.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது